1982 மார்ச் 2]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை அடையாறு தவிர, சென்னை அண்ணா சாலை போன்ற இடங்களிலேயும் துணை மின் நிலையம் வேண்டுமென்று அங்குள்ள பொதுமக்கள் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். அங்கே துணை மின் நிலையம் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அடையாறு துணை மின் நிலையம், அண்ணா சாலை 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திற்கும், வேளச்சேரி 110 கிலோவோல்ட் துணை மின்நிலையத்திற்கும் இடையே நிறுவத் திட்டமிடப்பட்டிருக்கின்றது. அண்ணா சாலையிலும் ஒன்று அமைய இருக்கின்றது. இதனால், சென்னை நகரைச் சுற்றி ஒரு 110 கிலோவோல்ட் வளைவு—லூப்—ஏற்படுத்தப்பட்டு, சென்னை நகருக்குச் சிறந்த முறையில் மின்சாரம் விநியோகம் செய்ய இயலும்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, சென்னையிலே உள்ள லைன்ஸ் எல்லாம் பழுதுபோய் இருப்பதாலும், கேபிள்கள் பழுதடைந்திருப்பதாலும், அடிக்கடி மின் தடங்கல்கள் வருகின்றன. அதை நிவர்த்தி செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆவன செய்யும்.

மானாமதுரை கூட்டுறவு பால் வழங்கும் சங்க தனி அதிகாரி மீது நடைபெற்ற தாக்குதல்.

*வினா எண். 303—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை கூட்டுறவு பால் வழங்கும் சங்க தனி அதிகாரி மீது தாக்குதல் பற்றி என்ன மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

(ஆ) அரசு அலுவலர்களுக்கு என்ன பாதுகாப்பு நடவடிக்கை அரசு எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மானாமதுரை கூட்டுறவு பால் வழங்கும் சங்க தனி அதிகாரி மீது தாக்குதல் நடத்திய சிப்பந்திகள் மற்றும் சிப்பந்திகளல்லாதோர் மீது புகார் பதிவு செய்யப்பட்டு காவல் துறையினர் விசாரணை செய்து வருகின்றனர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ஆ) சங்கத்திலுள்ள அலுவலர்கள் பயமின்றி அமைதியான முறையில் செயல்பட காவல் நிலைய காவல் சார்பு ஆய்வாளர் தேவையான பாதுகாப்புத் தரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அரசு ஊழியர்களுக்கும், அந்த துறையைச் சேர்ந்த இயக்குநர்களுக்கும் நல்ல உறவு முறையை ஏற்படுத்த அரசு ஏதேனும் திட்டங்கள் வகுத்துள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மானாமதுரை கூட்டுறவு பால் வழங்கு சங்கப் பிரச்சினை மீது, இந்த சம்பவத்தை ஒட்டி சிப்பந்திகள் 3 பேர்களும், சிப்பந்திகள் அல்லாதார் 11 பேர்களுமாக 14 பேர்கள் கைது செய்யப்பட்டு காவல் துறையினர் விசாரித்து, மேல் நடவடிக்கையை துரிதமாக எடுத்து வருகிறார்கள். அங்கே சுமுகமான நிலவரம் உருவாகவும் அரசு முயன்று வருகிறது.

பழனியிலுள்ள டான்சி நிறுவனம்.

*வினா எண். 304—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பழனியில் உள்ள டான்சி நிறுவனத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு எவ்வளவு ?

(ஆ) அதனால் அரசுக்கு கிடைத்த லாபம் எவ்வளவு?

(இ) அங்கு எவ்வளவு பேர் பணிபுரிகின்றனர் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு :—

1977-78—ரூ. 18.16 இலட்சம்.
1978-79—ரூ. 23.71 இலட்சம்.
1979-80—ரூ. 29.24 இல்ட்சம்.

(ஆ) இலாப/நட்டங்கள் :

1977-78—நட்டம் ரூ. 0.70 இலட்சம்.
1978-79—நட்டம் ரூ. 0.34 இலட்சம்.
1979-80—இலாபம் ரூ. 3.20 இலட்சம்.

(இ) பணியாளர்கள் எண்ணிக்கை—98.